பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**07 02 2026** **SATURDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) இந்தியா — மலேசியா இடையேயான பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தின்மூலம் இருதரப்பு உறவுகள் வலுப்பெற்றிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2) இந்திய — அமெரிக்க இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய ஏற்றுமதிக்கான வரி **50** சதவீதத்தில் இருந்து **18** சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3) மத்திய பட்ஜெட் மொத்த உள்நாட்டு உற்பத்தியையும், உற்பத்தியின் தரத்தையும் மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4) வேலூர் மாவட்டத்தில் உள்ள மோர்தானா அணைப்பகுதி சுற்றுலா தலமாக மேம்படுத்தப்படும் என்று மாநில அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.

5) உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று அமெரிக்காவை எதிர்கொள்கிறது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

இந்தியா — மலேசியா இடையேயான பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தின்மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப்பெற்றிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் பயணமாக மலேசியா சென்றுள்ள திரு நரேந்திர மோடிக்கு, கோலாலம்பூரில் அந்நாட்டு அரசு சார்பில் விமரிசையான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் அங்கு இந்திய வம்சாவளியினர் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் மலேசிய பிரதமர் திரு அன்வர் இப்ராஹிமுடன் கலந்துகொண்ட பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்திய — மலேசிய மக்களுக்கு இடையிலான உறவுகள் தனித்துவம் மிக்கது என்றும், நீண்டகாலம் வேரூன்றி இருப்பதாகவும் தெரிவித்தார்.

அந்நாட்டில் உள்ள இந்திய வம்சாவளியினர் இருநாட்டு மக்களுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

இந்தியாவும், மலேசியாவும் பொருளாதார வர்த்தக உறவுகளில் கைகோர்த்து இருதரப்பு வெற்றியை பகிர்ந்து கொள்வதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இந்திய — அமெரிக்க இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய ஏற்றுமதிக்கான வரி **50** சதவீதத்தில் இருந்து **18** சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்திய — அமெரிக்க கூட்டறிக்கை குறித்து இன்று பிற்பகல் செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்த திரு பியூஷ் கோயல், அண்டை நாடுகளான சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ், வியட்நாம் ஆகியவற்றை விட இந்தியாவின் வரி மிக குறைவாகவே உள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தின்படி, வேளாண் மற்றும் பால் பொருட்களுக்கு அமெரிக்கா முற்றிலுமாக வரியை நீக்கியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

நறுமணப் பொருட்கள், டீ, காபி, முந்திரி, அவகோடா, வாழைப்பழம், மாம்பழம், கிவி, பப்பாளி உள்ளிட்ட பொருட்களுக்கு அமெரிக்கா வரி ஏதும் விதிக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த வர்த்தக ஒப்பந்தத்துக்கு நாடு முழுவதும் மிகுந்த வரவேற்பு இருப்பதாகவும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை **45** லட்சம் கோடி ரூபாயாக உயர்த்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுத்து வருவதாக அவர் கூறினார்.

இந்த ஒப்பந்தத்தின்மூலம், முதலீட்டாளர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்கள், கைவினைக் கலைஞர்கள், நெசவாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கு ஏற்றுமதித் துறையில் ஏராளமான வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருப்பதாகவும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<>>>>>

மத்திய பட்ஜெட் மொத்த உள்நாட்டு உற்பத்தியை உயர்த்துவதோடு, உற்பத்தியின் தரத்தையும் மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் இன்று மத்திய பட்ஜெட் குறித்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதோடு ஏழை எளியோர் மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கியோரின் வாழ்க்கை

தரத்தை உயர்த்தும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

***(Sound Byte — எல். முருகன் — 54 Sec. )***

அதிக அளவில் **Generic** மருந்துகளை உற்பத்தி செய்ய ஏதுவாக, பயோ பார்மா சக்தி திட்டத்திற்கு பத்தாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

செமி கண்டெக்டர் மற்றும் மின்னணுப் பொருட்கள் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் வகையிலும், அதிக அளவு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும் தொழில் கட்டைமைப்பையும் இந்த பட்ஜெட் உருவாக்கிடும் என்று தெரிவித்தார்.

துறைமுகங்கள், சரக்கு போக்குவரத்து, நீலப் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடல்சார் மற்றும் உள்நாட்டு மீன்பிடி தொழிலுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் மீன்வள கட்டமைப்பை மேம்படுத்துவது, மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது போன்ற அறிவிப்புகள் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலா உள்ளிட்ட வளர்ந்துவரும் துறைகளில் திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கான அம்சங்களும் இதில் இடம்பெற்றிருப்பதாக டாக்டர். எல். முருகன் கூறினார்.

<<<<<<>>>>>

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே உள்ள மோர்தானா அணைப்பகுதி விரைவில் சுற்றுலா தலமாக மேம்படுத்தப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

மோர்தானா அணை திறக்கப்பட்டு **25** ஆண்டுகள் நிறைவையொட்டி, வெள்ளி விழா நினைவுத்தூணை இன்று திறந்துவைத்து பேசிய அமைச்சர், பேரணாம்பட்டு பகுதியில் உள்ள பத்திரப்பள்ளியில் அணை கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் **125** நாட்கள் வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரியும் பணித்தள பொறுப்பாளர்கள் மற்றும் பணியாளர்களை திமுக தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்கு ஈடுபடுத்துவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், திட்டப்பணியாளர்களை கட்சி பிரச்சாரத்தில் ஈடுபடுத்தும் ஊராட்சி செயலாளர்கள் மீது, மாவட்ட ஆட்சியர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கிராமப்பஞ்சாயத்து வளர்ச்சிக்காக பணிபுரியும் 125 நாள் வேலைத்திட்டப் பணியாளர்களை தேர்தல் பிரச்சார வேலைகளில் ஈடுபடுத்துவது கண்டனத்திற்குரியது என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சியில் ஊழல் மலிந்திருப்பதாக பிஜேபி தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

நீலகிரி மாவட்டம் குன்னூரில் பிஜேபி கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் உருவாகியுள்ளது என்றும் தெரிவித்தார்.

தமிழக மக்கள் திமுக ஆட்சியில் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

சத்துணவு ஊழியர்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாத காரணத்தால் அவர்கள்  போராடி வருவதாக திருமதி வானதி சீனிவாசன் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் ஆளும் திமுக தேர்தலுக்கு முன்பும், பின்பும் இரட்டை நிலைப்பாட்டை கடைபிடித்து வருவதாக தமாகா தலைவர் திரு ஜி கே வாசன் கூறியுள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது மாதந்தோறும் மின்கட்டணம் வசூலிக்கப்படும் என்ற அறிவிப்பை கொடுத்துவிட்டு ஆட்சிக்கு வந்தபின்னர் மின் கட்டணத்தை கடுமையாக உயர்த்தி மக்களுக்கு சுமையை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டினார்.

மாநிலத்தில் குற்றங்களை குறைப்போம் என்று அறிவித்துவிட்டு, சட்டம் — ஒழுங்கை முறையாக பராமரிக்காததால் குற்றச்சம்பங்கள் அதிகரித்துள்ளதாகவும் திரு ஜி கே வாசன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

கடலூர் மாவட்டம் சிதம்பரம் பகுதியில் சுமார் 57 கோடி ரூபாய் மதிப்பீலான 7 புதிய திட்டப்பணிகளுக்கு மாநில அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் அடிக்கல் நாட்டினார்.

---------------------

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தொகுதியில் சுமார் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகளை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

-------------

விழுப்புரம் மாவட்டத்தில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரஹ்மான் தொடங்கி வைத்தார்.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று அமெரிக்காவை எதிர்கொள்கிறது.

**மும்பையில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.**

**--------------**

**கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் மாவட்ட அளவிலான நீச்சல் போட்டி இன்று நடைபெற்றது.**

**<<<<<<<END>>>>>>**